குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்.
சி.சி.22/**2015**

**P.W:5**

**நாள்: 29.09.2022**

2022–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 வியாழக்கிழமை அரசு/புகார்தாரர்/எதிரி தரப்பு சாட்சியாகிய 5–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | அறிவழகன் | வயது | : |
| த/க/பெ : | குப்பன் | தொழில் | : |
| ஊர் : | | சமயம் | : |
| வட்டம் : | | ஜாதி | : |
| மாவட்டம் : | | | |

முதல் விசாரணை.

நான் தற்போது முத்துநாயக்கன் பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.8.2014–ம் தேதி நான் ஊ.மாரமங்கலம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவராக பணியாற்றி வந்தேன். அன்றைய தினம் ஓமலூர் காவல் நிலையத்தில் இரந்து என்னை காவல் துறையினர் சுமார் மதியம் 2.30 மணியளவில் பஞ்சுகாளிப்பட்டி பஸ் பேருந்து நிறுத்தம் அருகே வரசொன்னார்கள். அதன் பேரில் நானும், எனது உதவியாளர் சின்னன்னன் ஆகியோரும் சென்றோம். அங்கே சரவணன் என்பவரை விசாரித்து கொண்டிருந்தார்கள். அவர் அங்கே பணம் மற்றும் நகைகளை ஒரு பையில் வைத்து கொண்டிருந்தார். ஏதோ மேட்டூர் சென்று விற்பதற்காக நகைகளை வைத்திருந்ததாகவும், அதற்கு முன்னர் அய்யம்மாள் என்பவர் வீட்டில் நகை மற்றும் பணத்தை எடுத்து வந்ததாக சொன்னார். அவ்வாறு அவர் கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் என் முன்னிலையிலும், என் உதவியாளர் முன்னிலையிலும் பதிவு செய்து கையொப்பம் பெற்றார்கள். அதில் நான் முதலாவதாக கையொப்பம் செய்தேன். ( மேற்படி வாக்குமூலத்தில் உள்ள " என்னிடம் இருந்து.... ஆஜர் செய்கிறேன்" என்ற அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அதன் பேரில் என் முன்னிலையில் போலீசார் எதிரியிடம் இருந்து இரண்டு வளையல், மூன்று தோடு, ஒரு பிரேஸ்லெட், ஒரு மோதிரம், கழுத்து செயின், பணம் ரூ.18,000/–ஆகியவற்றை எதிரியின் வீட்டின் முன்பு வைத்து கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்தேன்.(அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .

அதன் பிறகு மேற்படி எதிரியிடம் இருந்து மருத்துவ உபகரணங்கள் கைப்பற்றதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரிலும் நான் கையொப்பம் நெசய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் எனது உதவியாளர் சின்னன்னன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

எனது அலுவலகத்திற்கும், மேற்படி பேருந்து நிறுத்தத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 500 மீட்டர் இருக்கும். காவல் நிலையத்தில் இருந்து யார் தகவல் தெரிவித்தது என்றால் உதவி ஆய்வாளர் அழைத்தார்.ஊ.மாரமங்கலம் கிராம எல்லை வரை தான் எனது அதிகாரம் என்றால் சரிதான். பணி தினத்தில் மற்றொரு கிராம எல்லைக்கு நான் செல்வதற்கு வட்டாச்சியரிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான்.எதிரியின் வீடு எந்த கிராமம் என்றால் பி.நல்லாக்கவுண்டம்பட்டி. எனது கிராம எல்லைக்கு அப்பாற்றப்பட்ட கிராமம் என்றால் சரிதான். இவ்வழக்கில் அவ்வாறு வட்டாச்சியரிடம் அனுமதி எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. பொதுவாக எதிரி விசாரித்த இடமாக சொல்லப்பட்டுள்ள பேருந்து நிறுத்தம் ஜன நடமாட்டம் மற்றும் கடைகள் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாள் டைப் செய்யப்பட்டது. எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிராம் நிர்வாக அலுவலர் என்று சொல்லியுள்ள நிலையில் பொதுமக்கள் யாரேனும், எதிரி போலி வைத்தியம் பார்ப்பதாக புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் கிராம நிர்வாக அலுவலர் என்ற அடிப்படையில் காவல் துறைக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி:அறிவழகன்

ஓம்/– K.யுவராஜ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.